பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 20] சென்னை: ஆடி 25 (9—8—72) புதன் வெளியூர்: ஆடி 26 (10—8—72) வியாழன் [இதழ்: 48

## ஏழைகள் வாங்கும் தானிய விலைகள் அதிகரிப்பு-- புள்ளிவிவரச் சான்று

புதுடில்லி, ஆக. 9—

இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் ஏழை மக்கள் வாங்கும் முரட்டு ரகத் தானியங்களின் விலைகள்தான் அதிகம் உயர்ந்திருக்கின்றன.

கடந்த ஆண்டிலிருந்து விலைவாசிகள் எவ்வாறு உயர்ந்திருக்கின்றன என்ற அதிகாரப்பூர்வமான புள்ளிவிவரங்கள் மக்களவையில் அளிக்கப்பட்டன; அங்

(4-ம் பக்கம் பார்க்க)

# எதிர்க் கட்சியினர் திணறல்

## நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை உடனடியாக விவாதிக்கத் தயக்கம்

### ஆயத்தமாவதற்கு அவகாசம் கேட்டுக் குரல் எழுப்பிய விந்தை

சென்னை, ஆகஸ்ட் 9—

இன்று சட்டப் பேரவையில், கலைஞர் தலைமையில் உள்ள கழக அரசு மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்த எதிர்க் கட்சியினர், 'உடனடியாக அத்தீர்மானத்தை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளக்கூடாது' என்று கூறியது வியப்பாக இருந்தது!

உடனடியாக விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளாதிருக்க என்னென்ன காரணங்கள்--சாக்குப்போக்குகளைக் கூற முடியுமோ அவ்வளவையும் ஒருவர் மாறி ஒருவர் எடுத்துக்கூறத்தலைப்பட்டனர்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை உடனடியாக எடுத்துக்கொள்ளக் கூடாது என்பதற்கு, எதிர்க் கட்சி உறுப்பினர்கள் எடுத்துக்கூறிய காரண காரியங்களுக்கெல்லாம் பேரவைத் தலைவர் தக்க பதில் அளித்து--உடனடியாகத் தீர்மானத்தின் மீதான விவாதத்தைத் தொடங்குமாறு கூறினர்.

ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக்கொண்டு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்த எதிர்க்கட்சியினர், விவாதத்தை உடனடியாகத் தொடங்கலாம் என்ற முதலமைச்சரின் கோரிக்கையைப் பேரவைத் தலைவர் ஏற்றதும், 'வேண்டாம்--வேண்டாம்; பிறிதோர் நாள் வைத்துக் கொள்ளலாம்' என்று கூறுவதில் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக்கொண்டு எழுந்து குரல் கொடுத்தது விந்தையாகவே இருந்தது! அதைக் கண்டு ஆளுங்கட்சி வரிசையில் சிரிப்பொலி எழுந்தது!

சட்டப் பேரவையில் இன்று கேள்வி நேரம் முடிந்ததும், கலைஞர் தலைமையில் உள்ள கழக அரசின்மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம் கொண்டுவரவிருப்பதாக ஐந்து பேர்கள் முன்னறிவிப்புக் கொடுத்திருப்பதாகப் பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் அறிவித்தார்.

'நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்குக் குறைந்தது 24 உறுப்பினர்களின் ஆதரவு வேண்டும்' என்ற பேரவை விதிமுறையையும் எடுத்துரைத்தார்.

தீர்மானத்தை ஆதரிப்பதாக 27 பேர் எழுந்து நின்றதால், தீர்மானம் விவாதத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சுதந்திராக் கட்சிச் சார்பில் திரு. எச். வி. ஹண்டே, வலது கம்யூனிஸ்டுக் கட்சி சார்பில் கே. டி. கே. தங்கமணி, இந்திரா காங்கிரசு சார்பில் ஏ. ஆர். மாரிமுத்து -- டி. என். அனந்தநாயகி, சிண்டிகேட் கட்சி சார்பில் திரு. பொன்னப்ப நாடார் ஆகியோர் தனித்தனியே நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதற்கான முன்னறிவிப்புக் கொடுத்திருந்தனர்.

அவையின் மரபுப்படி, முதலில் கொடுத்தவரின் முன்னறிவிப்பை ஏற்றுக்கொள்வதாகப் பேரவைத் தலைவர் அறிவித்தார்; அதன்படி, முதலில் முன்னறிவிப்புக் கொடுத்த எச். வி. ஹண்டேயின் தீர்மானம் விவாதத்துக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

வலது கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் கே. டி. கே. தங்கமணி, விவசாயிகள் கிளர்ச்சியில் இந்த அரசு கடைபிடித்த கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஒரு தீர்மானம் கொண்டு வந்திருந்தார்; இதற்கும் அவையில் போதிய எண்ணிக்கை உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்ததால், இத்தீர்மானத்தையும் பேரவைத் தலைவர் விவாதத்துக்கு ஏற்றுக் கொண்டார்.

'நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டால் பத்து நாட்களுக்குள் அதனை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும்' என்ற விதியையும் பேரவைத் தலைவர் சுட்டிக்காட்டினர்.

உடனே முதலமைச்சர் எழுந்து, 'நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை இப்போதே முன்மொழிந்து விவாதத்தையும் துவக்கலாம்' என்றார்.

அதனைப் பேரவைத் தலைவர் ஏற்றுக் கொண்டபோதுதான், எதிர்க் கட்சியினர் அதற்கு ஆட்சேபம் கிளப்பினர்.

உடனடியாக விவாதம் நடத்துவதற்குத் தாங்கள் தயாராக வரவில்லை என்றும், போதிய அவகாசம் வேண்டுமென்றும், பத்து நாட்கள் அவகாசம் இருப்பதால் பிறிதோர் நாள் வைத்துக்கொள்ளலாம் என்று, விவாதத்துக்காக எவ்வளவு நேரம் ஒதுக்குவது என்று முடிவு செய்யப்பட்ட பின்னரே விவாதம் தொடங்க வேண்டும் என்றும் -- இப்படிப் பல்வேறு காரணங்களை எதிர்க் கட்சித் தலைவர்கள் கூறினர்.

நேரம் ஒதுக்குவது பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்றும், எவ்வளவு நேரம் ஒதுக்குவது என்று பேரவைத் தலைவருக்குத் தெரியும் என்றும், வேண்டுமானால் உடனடியாக அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டி நேரம் ஒதுக்குவது பற்றி முடிவு செய்துகொள்ளலாம் என்றும் கூறி, உடனடியாக விவாதத்தைத் தொடங்குமாறு பேரவைத் தலைவர் சொன்னார்.

அதன் பிறகு, திரு. ஹண்டே தமது தீர்மானத்தை முன்மொழிந்து பேசத் தொடங்கினார்.

## கலைஞர் உருவாக்கிய புதிய சட்டமன்ற மரபு

### நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை உடனே விவாதிக்கக் கோரிக்கை

### பேரவைத் தலைவர் மதியழகன் பாராட்டுரை

சென்னை, ஆக. 9—

"நல்ல சட்டமன்ற மரபினை உருவாக்குகின்ற வகையில் இன்று நமது முதலமைச்சர் வழிகாட்டியுள்ளார்"

என்று சட்டப் பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் பாராட்டுத் தெரிவித்தார்.

இன்று சட்டப் பேரவையில், எதிர்க் கட்சியினர் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்ததை அடுத்து, 'அதனை எப்போது விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளலாம்' என்பது பற்றிக் கருத்தறிவிக்கையில், முதலமைச்சர் கலைஞர் பின்வருமாறு கூறினார்:—

"இந்த அரசின்மீது நம்பிக்கை இல்லை என்று கூறிவிட்ட பிறகு, வேறு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெறுவது நம்பிக்கைக்கு உரியவையாக இருக்கமுடியாது என்பதால், இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை இப்போதே முன்மொழிந்து -- விவாதத்தையும் உடனடியாகத் தொடங்கிவிடலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்;

முதல்வர் இப்படிக் கூறியதை வரவேற்கும் வகையில்தான் மேற்குறிப்பிட்டவாறு பேரவைத் தலைவர் தமது பாராட்டினைத் தெரிவித்தார்.

"நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நமது முதலமைச்சர் உடனடியாக ஏற்று -- அதனை விவாதிக்க ஒப்புக்கொண்டதை ஆர்வத்துடன் வரவேற்கிறேன்; இப்படியொரு நல்ல சட்டமன்ற மரபினை உருவாக்க வழிவகுத்த முதல்வரைப் பாராட்டுகிறேன்" என்றார் அவைத் தலைவர்.

இந்தச் சமயத்தில்தான் எதிர்க் கட்சியினர், உடனடியாகத் தீர்மானம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்வதை ஆட்சேபிக்கும் வகையில் குரல் எழுப்ப ஆரம்பித்தனர்.

எதிர்க் கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார், 'இத்தீர்மானத்தைப் பிறிதோர் நாள் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளலாம்' என்ற யோசனையைத் தெரிவித்தபோது, முதல்வர் குறுக்கிட்டு,

"நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்துள்ள திரு. பொன்னப்ப நாடார் அவர்களே -- தீர்மானத்தை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளுகின்ற வரையில் இந்த அரசுமீது நம்பிக்கை தெரிவித்திருப்பது கண்டு மகிழ்ச்சி; எனினும், எப்பொழுது இந்த அரசுமீது நம்பிக்கை இல்லை என்று ஆகிவிட்டதோ-- அப்பொழுதே அதைத் தீர்த்துக் கொள்வது நல்லது! இதை முடித்துக்கொண்டு, பேரவையின் மற்ற நடவடிக்கைகளைக் கவனித்துக் கொள்ளலாம்" என்றார்.

பின்னர் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்மொழிந்து திரு. எச். வி. ஹண்டே பேசினார்.

## குட்டைப் பாவாடையும் கூந்தல் வளர்ப்பும்

### சட்டப் பேரவையில் சுவையான கேள்வி--பதில்

சென்னை, ஆக. 9—

இன்று சட்டப் பேரவைக் கேள்வி நேரத்தின்போது, கல்லூரி மாணவிகள் குட்டைப் பாவாடை அணிவதுபற்றியும் -- கல்லூரி மாணவர்கள் நீண்ட கூந்தல் வளர்ப்பது பற்றியும் கேட்கப்பட்ட கேள்விகள் அவையில் சிரிப்பொலியை எழுப்பின!

கோவைச் செழியன்:—"பம்பாயில், கல்லூரி மாணவிகள் குட்டைப் பாவாடை அணிவதையும், மாணவர்கள் 'டைட் பேண்ட்' அணிவதையும் தடை செய்திருக்கிறார்கள்: அதைப் போல் நமது மாநிலத்திலும் தடைவிதிக்கப்படுமா?"

அமைச்சர் நாவலர்:—"நமது மாநிலத்தில் தடைவிதிக்கக் கூடிய அளவுக்கு நிலைமை வரவில்லை; இங்குள்ள கல்லூரிகளில் கூடியவரையில், சில ஒழுங்கு விதிகள் கடைபிடிக்கப்பட்டு வருகின்றன; தமிழக மாணவ -- மாணவிகளும் அந்த நிலைமையைக் கொண்டுவரமாட்டார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது."

பொன்னப்ப நாடார்:—"இங்குள்ள கல்லூரி மாணவர்கள் சிலர், 'ஆணா -- பெண்ணா' என்று அடையாளம் தெரியாத அளவுக்கு நீண்ட கூந்தலை வளர்த்துக்கொண்டிருக்கிறார்களே -- அதுபற்றி அரசு நடவடிக்கை எடுக்குமா?"

முதலமைச்சர் கலைஞர்:—"இரண்டாண்டுக்குமுன் கோவையில் நடந்த மாநாட்டில் நான் பேசுகையில், 'இப்படி நீண்ட மீசையும் கூந்தலும் வளர்ப்பது கூடாது' என்று கூறினேன்; நான் அப்படிக் கூறியதை உங்கள் கட்சியைச் சேர்ந்த பத்திரிகைதான் கண்டித்து எழுதியது; அந்தப் பத்திரிகை முதலில் தனது கருத்தை மாற்றிக்கொள்ளட்டும் -- பிறகு இதுபற்றி நடவடிக்கை எடுப்பது பற்றி யோசிக்கலாம்."

## இலங்கைத் தமிழர்களுக்குத் தனிக் கொடி -- தனிச் சின்னம்

கொழும்பு, ஆக. 9—

இலங்கையில் தமிழர்களுக்கென்று தனிக் கொடி -- தனிச் சின்னம், தமிழ் இசைப் பாடல்கள் ஆகியவற்றை உருவாக்குவதற்கு யோசனைகள் கூறும்படி, இலங்கையின் தமிழ்ச் சமுதாயத்தினரை இலங்கை தமிழரசுக் கட்சி கோரியிருக்கிறது; இது சம்பந்தமாக தமிழ் பத்திரிகைகளில் இந்தக் கட்சி விளம்பரங்களை வெளியிட்டுள்ளது.

"இலங்கையில் தமிழர்களுக்கு அதிகச் சலுகைகளை இலங்கை அரசு அறிவிக்காவிடில், பிரிவினை கோருவதற்கு இந்தக் கட்சி தயாராகி விட்டது என்பதை இது குறிக்கிறது" என்று அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர்.

# சூதாட்டக்காரர்களால் நம்மை அழிக்க முடியாது

## நான்கு தலைமுறைக்குப்பிறகும் கழகம் வளரும்

### பேராசிரியர் க. அன்பழகன் முழக்கம்

மதுரை, ஆக. 9--

"இந்த இயக்கம், எங்கள் இரத்தத்தோடு இரத்தமாக -- சதையோடு சதையாக இணைந்திருக்கிறது!

"தி. மு. கழகம் மக்கள் மன்றத்தில் பெற்றிருக்கின்ற செல்வாக்கை அரசியல் சூதாட்டக்காரர்களால் அழித்து விட முடியாது!

"சனநாயகம் என்பது வாழ்க்கை முறை; இந்தச் சக்தி நம் இயக்கத்தில் கலந்திருக்கிறது; எந்த இயக்கமும் ஒழியும்; ஆனால், சனநாயகம் நிலைத்து நிற்கும்!

"தமிழர்களிடத்தில் சனநாயகம் தனி இடத்தைப் பெற்றிருக்கிறது! சனநாயகம் வளர வளர மக்களுக்கு நன்மை தரும் திட்டங்கள் மலர்ந்துவருகின்றன! இத்தகைய திட்டங்களை நிறைவேற்றும்போதுதான், மாநில சுயாட்சிக் கொள்கை ஏற்படுகிறது!"

என்று, மக்கள் நல்வாழ்வுத் துறையமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், மதுரை மாநாட்டில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்; அவர் மேலும் பேசியதாவது:--

"இந்த மாபெரும் எழுச்சிமிக்க கூட்டத்தைப் பார்க்கும்போது, 'தமிழகத்தின் எதிர்காலம் சிறப்பாக இருக்கும்' என்பது புலனாகிறது; இந்தச் சிறப்பான எதிர்காலத்தை மங்கச் செய்ய எந்தச் சக்தியும் இல்லை!

நாங்களெல்லாம் அண்ணாவின் தம்பிகள் வரிசையில் இருக்கிறோம் என்றால், மாநாட்டுத் தலைவர் முரசொலி மாறனைப் போன்றவர்கள் எங்களுக்குத் தம்பிகள் வரிசையில் வருகிறார்கள்; இந்தத் தம்பிமார் வரிசை நான்கு தலைமுறைக்கு அப்பாலும் வளருமே தவிர அழியாது—அழிக்க முடியாது; அதற்கு எடுத்துக்காட்டுத்தான் இந்த மாநாடு!

இந்த மாநாட்டு மேடையில் நிற்கையில் எனது நினைவுகள் கடந்த காலத்தை எண்ணிப் பார்க்கின்றன; 26 ஆண்டுகளுக்கு முன்னால்—1945-ம் ஆண்டில் இதே மதுரையில்தான் தன்மானத் தந்தை பெரியார் அவர்களும், அறிவுலக மேதை அண்ணா அவர்களும் கலந்துகொண்ட கருஞ்சட்டை வீரர் மாநாடு நடைபெற்றது ஏறத்தாழ பத்தாயிரம் பேர் அந்தக் காலத்திலேயே கூடியிருந்தார்கள்; அந்த மாநாடு, எதிரிகளால் அலங்கோலமாகக் கலைக்கப்பட்டது.

இந்த மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவரான மதுரை முத்து அவர்கள்தான் தொண்டர் படைத் தலைவராக அன்று இருந்தார்.

அந்த மாநாடு, எதிரிகளால் தீக்கிரையாக்கப்பட்டது; இது நடந்தது 1945; இன்று நடப்பது 1972; பெரியதோர் வரலாறு இல்லையைத் தினம் உருவாகியிருக்கிறது.

அன்றைக்கு அறிஞர் அண்ணா அவர்கள், 'காஞ்சிபுரம் அண்ணாதுரை'யாகத்தான் தமிழ்நாட்டிற்கு அறிமுகமானார்; அதற்குப் பிறகு அண்ணா அவர்கள், திராவிடர் கழகத் தளபதியாகவும் -- திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளராகவும் ஆனார்; இதற்குப் பிறகுதான் அவர், 'அறிஞர் அண்ணா' என்று அழைக்கப்பட்டார்; தமிழகத்தின் -- தமிழ்நாட்டு மக்களின் வழிகாட்டியானார்; நம்மையெல்லாம் தமிழகத்திற்கு வழிகாட்டக்கூடிய வகையில் வளர்த்து ஆளாக்கினர்!

தமிழ்நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் விதத்தில் ஆட்சிப் பொறுப்பில் நம்மை அமர்த்தி விட்டுச் சென்றிருக்கிறார்!

அறிஞர் அண்ணா அவர்கள், புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களைப் பற்றி ஒரு முறை குறிப்பிட்டபோது, 'கலை உலகிலிருந்து கிடைத்த மாங்கனி என் மடியில் விழுந்திருக்கிறது; அதை எதிரிகளிடம் விடமாட்டேன்' என்று கூறினர்; அப்படி நாங்கள் அண்ணா அவர்களின் மடியிலும் -- தோளிலும் -- பார்வையிலும் வளர்ந்தவர்கள்!

நான் அணிந்துள்ள வேட்டி சுயமரியாதைக் குறிக்கிறது; தமிழின் தன்மானத்தை, மதம் -- சாதியால் அடிமைப்படுத்தவிட மாட்டோம்; 'நாம் ஒரு குலம் -- நாம் அனைவரும் ஒரு குடும்பம் -- அண்ணாவின் தம்பிமார்கள்' என்ற உணர்வு நமக்கு இன்று இருக்கிறது; இது அகலவில்லை -- அகலவும் செய்யாது!

'முத்தமிழைக் காப்போம் -- இந்திக்கு அடிமையாக தமிழை விடமாட்டோம் -- எவ்வளவு தியாகத்தை செய்தேனும் இந்தி ஆதிக்கத்தை வரவிடமாட்டோம்' -- இந்த உணர்வுதான் சட்டை; இதுதான் எங்களுக்குப் பாதுகாப்பு தருகிறது.

மாற்றுக் கட்சி நண்பர்கள் தங்களது அரசியலை வைத்து தி. மு. கழகத்திற்கு முடிவு கட்டிவிடலாம் என்று கருதினார்கள்! கழகம் அருகம்புல் போன்றது -- ஆலமரத்தைப்போல விழுது விட்டு வளர்ந்துள்ளது!

தென்னகத்தில் அறிவு அடிப்படையில் ஒரு கட்சி வளருவது பற்றி அமெரிக்கா -- பிரிட்டிஷ் நாடுகளில் எழுதப்பட்டன; இந்த அளவிற்கு கழகம் வளர்ந்து வருகிறது!

மற்ற மாநிலங்களில் ஆளும் கட்சியிலிருந்து பலர் விலகினர்கள்; எனவே, எதிர்க்கட்சிகளை அகற்றி தனது அரசினை இந்திரா காந்தி ஏற்படுத்த முடிந்தது.

தமிழகத்தில் அப்படி முடியாது; தமிழகத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியை இந்திரா கட்சி நிலைநாட்டிவிடும் என்றும் கூறப்படுகிறது; இது முடியாது; அப்படி மாற்றிவிட்டாலும், எவ்வளவு நாளைக்கு இதை ஆண்டுவிட முடியும்?

"14 பிணங்கள் விழுந்தன--கருணாநிதி இறங்கிவந்தார்; 100 பிணங்கள் விழுந்தால் இந்த ஆட்சி கவிழ்ந்துவிடும்" என்று பேசுகிறார் காமராசர்; எந்த தலைவரும் பேசக்கூடாததை காமராசர் சொல்லியிருக்கிறார்;

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது, 'எவர் உயிருக்கும் ஆபத்து ஏற்படக்கூடாது' என்று அண்ணா அவர்கள் கூறினார்கள்.

ஆனால் காமராசரோ, '100 பிணங்கள் விழவேண்டும் -- ஒப்பாரி வைக்கவேண்டும்--இதைக் கொண்டு இந்திரா காந்தி தமிழக அரசை கவிழ்க்க வேண்டும்' என்று காமராசர் கருதுகிறார்! இது நடக்காது!

'இரத்தம் சிந்தும் போராட்டம் ஏற்பட்டால்தான் கட்சி வளரும்' என்ற பலாத்கார நோக்கத்தில் கம்யூனிஸ்டுகள் சதி செய்தார்கள்!

விவசாயப் போராட்டத்தை நடத்தியவர்கள், முதல்வரை சந்தித்துப் பேசியபோது, 'பலாத்கார வாதிகள்மீது வழக்கு கூடாது -- நீதி விசாரணையும் நடத்தக் கூடாது' என்று கூறினர்; ஆனல், சுப்ரமணியமும் -- மோகன் குமாரமங்கலமும், நீதி விசாரணை நடத்தவேண்டும்' என்றார்கள்.

இப்படி கூறுபவர்கள் 'பலாத்காரத்தில் ஈடுபட்டவர்கள் மீதும் வழக்குப் போடவேண்டும்' என்று ஏன் கூறவில்லை?"

# திட்டித் திட்டித் தெருவுக்கு வந்தவர் காமராசர்

## தாங்கித் தாங்கிக் கோட்டைக்குள் சென்றவர்கள் நாம்

### போராட்டத்தைத் தேடி அலைகிறவரின் எதிர்காலம் எப்படியோ? -- அமைச்சர் ப. உ. சண்முகம் தெளிவுரை

மதுரை, ஆக. 9—

"போராட்டத்தைத் தேடி அலைகிறார் காமராசர்; அவர் திட்டத் திட்டத்தான் நாம் இந்த நிலைக்கு வளர்ந்தோம் -- அவர் இன்றுள்ள நிலைக்குத் தாழ்ந்தார்!

இன்னமும் அவர் நம்மைத் திட்டிக்கொண்டுதான் இருக்கிறார்! இன்னும் எந்த நிலைக்கு அவரை இது கொண்டு போய்ச் சேர்க்குமோ"

என்று, மதுரை மாநாட்டில் பேசுகையில், உணவு -- வருவாய்த் துறை அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் குறிப்பிட்டார்; அவர் மேலும் பேசியதாவது:--

"அறிஞர் அண்ணா அவர்கள் தெரிவித்ததுபோல, தமிழ்நாட்டில் உள்ள பத்திரிகைகளில் சில நம்மை ஆதரிக்காவிட்டாலும், கழகத் தோழர்கள், 'நடமாடும் பத்திரிகை'களாக இருக்க வேண்டும்.

இங்குள்ள சில ஏடுகள் கழகச் செய்திகளை மறைத்தும் திரித்தும் வெளியிடுகின்றன; அவர்களுக்குச் சொல்லிக்கொள்வேன் -- 'சீப்பை மறைத்துவிட்டால் திருமணம் நின்றுவிடாது' என்று!

திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிய நாள்தொட்டு தாண்டிய காட்டாறுகள் ஏராளம்! சந்தித்த எரிமலைகள் கொஞ்சநஞ்சமல்ல! ஏற்பட்ட சோதனைகளைத் தாண்டத்தாண்ட எதிரிகள் தடைக் கற்களைப் போட்ட வண்ணம் இருக்கிறார்கள்!

அவைகளைத் தூள்தூளாக்கிக் கொண்டு நாம் முன்னேறிக் கொண்டுதான் இருக்கிறோம்!

'கழக அரசு கவிழும்' என்று இங்கே சிலர் ஆருடம் கணித்துக் கொண்டிருக்கிறார்கள்! கழக அரசின்மீது பயங்கரமான ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை கூறிக்கொண்டிருக்கிறார்கள்! 'ஊழல்' என்கிறார்கள் -- 'அதிகாரத்தில் தலையீடு' என்கிறார்கள் -- 'அணுகுமுறை தவறு' என்கிறார்கள்!

என்றாலும், அறிஞர் அண்ணா அவர்கள் நமக்குக் கூறிய அறிவுரைப்படி, எதையும் தாங்கும் இதயத்தோடு அவைகளையெல்லாம் பொறுத்துக் கொண்டு, நமது இலட்சியமான ஏழை எளிய மக்களுக்கு நன்மை செய்யும் காரியங்களைச் செய்து வருகிறோம்!

பழி சுமத்துவதால் -- சூழ்ச்சி செய்வதால் ஏழை மக்களின் இதயத்தில நிறைந்திருக்கின்ற கழகத்தை அழித்துவிட முடியாது!

காமராசர், மன்றாடியார் போன்ற பெரும் நிலச்சுவான்தார்களுக்கு -- அவர் ஆட்சிக் காலத்தில சலுகை தந்தார்; நில உச்சவரம்பில், மாட்டுப் பண்ணைக்கு விதிவிலக்கு--சர்க்கரை ஆலைக்கு விதிவிலக்கு -- என்று அவர்களுக்கு விதிவிலக்குக் கொடுத்துப் பணக்காரர்களைக் காப்பாற்றினார்!

அந்த விதிவிலக்குகளையெல்லாம் ரத்து செய்து, வரும் சட்டமன்றத்தில் சட்டம் கொண்டுவரப் போகிறோம்; அவர்களிடமிருந்து பறிக்கப்படும் நிலங்களை, ஏழை விவசாயிகளுக்கு அளிக்கப் போகிறோம்!

கழக அரசுதான், விவசாயிகள் குடியிருக்கும் மனைகளை அவர்களுக்கே சொந்தமாக்கச் சட்டம் கொண்டுவந்திருக்கிறது! விவசாயிகளுக்குக் கூலி நிர்ணயச் சட்டத்தை இந்த அரசுதான் கொண்டுவந்திருக்கிறது!

இப்படி நாம் சாதித்த சாதனைகள் ஏராளம்; இந்தச் சாதனைகளைக் குறைகூற வக்கில்லை -- வகையில்லை! எனவே வன்முறையைத் தூண்டுகிறார்கள்!

'பெரிய அளவில் போராட்டம் நடத்தப்போகிறேன்' என்று பெருந் தலைவர் காமராசர் பேசி வருகிறார்; எதிர்க் கட்சிகள் அத்தனையும் சேர்ந்து அண்மையில், போராட்டம் நடத்தின; சாலைகளில் கட்டை வண்டியை நிறுத்தியும்-- பாறாங்கற்களைப் போட்டும் -- வன்முறை தெறியாட்டம் ஆடியும் பெரும் அளவில் நடத்தப்பட்ட அந்தப் போராட்டத்தையே கழகம் சந்தித்தது! இதைவிட உச்சக் கட்டமாக இன்னொரு போராட்டம் நடத்த முடியாது! அப்படி நடந்தாலும் தி. மு கழகம் அதனைச் சந்திக்கும்!

தி. மு. கழகம் எதிர்க் கட்சியாக இருந்தபோது, போராட்டத்தைத் தேடி அலைந்ததில்லை; தானாக வந்த போராட்டத்தைச் சந்திக்காமலும் இருந்ததில்லை; ஆனல் காமராசரோ, 'போராட்டம் எங்கே -- எங்கே' என்று தேடி அலைந்து கொண்டிருக்கிறார்!

காமராசருக்குக் கூறிக் கொள்வேன் -- கழகத்திற்கு எதிராக நீங்கள் எத்தனை முறை தமிழ்

(4-ம் பக்கம் பார்க்க)

# மொழி ஆதிக்கத்துக்கு நேர்ந்த கதி

## டில்லியின் பொருளாதார ஆதிக்கத்துக்கும் ஏற்படும்

### மத்திய அரசுக்குத் தொழில் அமைச்சர் செ. மாதவன் எச்சரிக்கை

மதுரை, ஆக. 9 –

"தி. மு. கழக அரசு, 'இந்தி என்றும் தேவையில்லை; தமிழ் -- ஆங்கிலம் மட்டுமே போதும்' என்று சட்டமன்றத்திலேயே இரு மொழித் தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றிக் காட்டியிருக்கிறது! அதன்மூலம் மொழி ஆதிக்கம் சட்டத்தின் துணையோடு தலை எடுத்த போது தமிழ்நாடு அதனைத் தூக்கியெறிந்தது! அதே டெல்லி அரசு இப்போது நம மீது பொருளாதார ஆதிக்கத்தைத் திணிக்க முயற்சிக்கிறது!

"மொழி ஆதிக்கத்தைத் தகர்த்திடத் தமிழகம் கிளர்ந்தெழுந்ததைப்போல் டெல்லியின் பொருளாதார ஆதிக்கத்தையும் தமிழகம் சந்திக்கும்!"

என்று, தொழில் அமைச்சர் செ. மாதவன் அவர்கள், மதுரை மாநாட்டில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்; அவர் மேலும் பேசியதாவது:--

"திராவிட முன்னேற்றக் கழகம், தமிழ்நாட்டில் புதியதோர் வரலாற்றை --புதிய சகாப்தத்தைப் படைத்திருக்கிறது.

துணைக் கண்டத்தில், மக்கள் எதையெதைச் சாதிக்க வேண்டும் என்று விரும்புகிறார்களோ அவைகளை எல்லாம் தமிழ்நாட்டில் தி. மு. கழக அரசு சாதித்து வருகிறது.

'இந்திதான் ஆட்சி மொழியாக ஆக வேண்டும்' என்று ஒரு காலத்தில் கொக்கரித்தார்கள்; அரசியல் சட்டத்திலும், 'இந்தியே ஆட்சிமொழி' என்று எழுதி வைத்தார்கள்; ஆனல் இந்தியைத் தமிழ்நாட்டில் திணிக்க வடவர் கண்ட கனவைத் தமிழக மக்கள் தவிடுபொடியாக்கிக் காட்டினார்கள்!

'மத்திய ஆட்சியுடன் தமிழ்நாடு ஒத்துழைக்க மறுக்கிறது' என்று சி. சுப்பிரமணியம் கூறுகிறார்; அவர்கள் விரும்பிய எந்தச் சமதர்மத் திட்டத்தைச் செயல்படுத்தத் தமிழக அரசு பின்வாங்கியது என்று அவர் கூறட்டும்.

'விவசாயிகளுக்கு வேண்டிய எல்லா நன்மைகளையும் செய்ய வேண்டும்' என்று இந்த அரசு விரும்புகிறது; ஆனல் அதற்கும் டில்லியைத்தான் கேட்க வேண்டியிருக்கிறது!

தென்பாண்டி மண்டலத்தில் ஓர் உரத் தொழிற்சாலை தொடங்கவும் -- ரூ. 12 கோடி மதிப்பீட்டில் நைலான் தொழிற்சாலை மதுரையில் துவக்கவும் நாம் திட்டமிட்டிருக்கிறோம்; ஆனல் அதற்கும் டில்லியின் அனுமதியைப் பெறவேண்டிய நிலையில் இருக்கிறோம்.

ரூ. 390 கோடி மதிப்பீட்டில் பெரிய பெரிய தொழிற்சாலைகளைத் துவக்கும் திட்டம், இந்த அரசிடத்தில் இருக்கிறது

ஆனல், 'மத்திய அரசுதான் எந்தத் தொழிலையும் துவக்கவேண்டும் -- அனுமதிக்க வேண்டும்' என்ற புதிய பொருளாதார ஆதிக்கத்தை அவர்கள் திணித்து வருகிறார்கள்.

எனவே, மொழி ஆதிக்கத்தைத் தமிழ்நாட்டில் தலைதூக்காது ஒழித்துக் கட்டியதுபோல், டில்லியின் பொருளாதார ஆதிக்கத்தையும் ஒழித்துக்கட்ட தமிழக மக்கள் அனைவரும் சூளுரை எடுத்துக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்."

# காமராசர்--சுப்பிரமணியம் காணும் கனவு பலிக்காது

## கழகஅரசுபக்கமேதமிழ்நாட்டுமக்கள்

## வீணர்களின் விஷமப் பிரசாரங்களை முறியடிப்போம்

### மதுரை மாநாட்டில் அமைச்சர்கள் முழக்கம்

மதுரையில் நடைபெற்ற மதுரை மாவட்ட தி. மு. க மாநாட்டில் இரண்டு நாட்களிலும் கலந்துகொண்ட அமைச்சர்கள் ஆற்றிய உரைகளின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது.

கழக அரசு தமிழ் மக்களுக்கு ஆற்றிவரும் அரும் பணிகளை விளக்கியும், இந்த அரசைக் கவிழ்த்துவிடலாம் என்ற நைப்பாசையில் செய்துவரும் விஷமப் பிரசாரங்களைக் கண்டித்தும், சிண்டிகேட்-இந்திரா கட்சி--வலது கம்யூனிஸ்டு ஆகிய கட்சிகளின் உள்நோக்கத்தை அம்பலப்படுத்தியும் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு: –

#### என். வி. நடராசன்

"கழக அரசு மிகச் சிறந்த முறையில சனநாயகப் பண்புடன் ஆட்சி நடத்திவருகிறது; எனினும், நாம் பாசிச முறையில் நடப்பதாக மத்திய அமைச்சர் சுப்பிரமணியம் கூறுகிறார்.

உண்மையில் பாசிச ஆட்சி நடத்துவது இந்திரா அரசுதான்; மத்திய அரசின் ஏஜெண்டாக இங்கு இருக்கும் ஆளுநர் கழக அரசைக் கலந்தாலோசிக்காமல் கண்ட கண்ட நபர்களைச் சந்திக்கிறார்; அவர்கள் சொல்வதைக் கேட்டுக்கொண்டு இவரும் ஏதோ செய்யப் போவதாகப் பதில் கூறியதாக ஒரு பத்திரிகையில் செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது; அது உண்மையாக இருக்குமானல், 'சனநாயகத்திற்குப் புறம்பாக -- இந்த ஆட்சிக்கு எதிராக நடத்தப்படும் சதித் திட்டத்திற்கு ஆளுநர் துணைபோகிறாரோ' என்ற ஐயம் ஏற்படுகிறது.

சனநாயக ரீதியில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு விரோதமாகச் செயல்படும் எதிர்க் கட்சிகளின் சதிச் செயலுக்கு ஆதரவு தரலாமா?

இதெல்லாம், இந்திரா அரசின் பாசிசப் போக்கைத்தான் காட்டுகிறது; எனவே, பாசிச முறையில் நடப்பது கழக ஆட்சி அல்ல -- இந்திரா கட்சியும அவர்களது ஆட்சியும்தான்!

'சனநாயகத்தைக் காப்போம்' என்ற காமராசர், சனநாயகத்தைக் காப்பாற்றவில்லை -- பணநாயகத்தைக் காப்பதற்குத்தான் அவர் புறப்பட்டிருக்கிறார்.

கழக அரசு தனது சீரிய நல்ல பல திட்டங்களால், இன்றைக்கு அனைத்திந்தியாவிலும் மிகச் சிறந்து விளங்குகிறது.

'கழக ஆட்சி ஆறு மாத காலத்திற்குள் அழிந்துவிடும்' எனக் காமராசர் கூறினர்; 'ஒழித்துக் கட்டுவோம்' என்றார்; ஆனல் நடந்தது என்ன?

நிலையான ஆட்சியைத் தி. மு. கழகம் நிறுவிக் காட்டியது மட்டுமல்ல—1971 தேர்தலிலும், எத்தனையோ எதிர்ப்புகளுக்கிடையிலும், புதிய பொலிவுடன் மீண்டும் ஆட்சிக்கு வந்தது! மக்கள் சக்தி நம் பக்கம் இருக்கிறது!

ஏழை எளிய மக்களின் ஈடேற்றமே நமது குறிக்கோள்; அதற்காக நல்ல பல திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி வருகிறோம்; அதேநேரத்தில், இதே நோக்கத்துடன் மத்திய அரசால் கொண்டுவரப்பட்ட முற்போக்குத் திட்டங்களுக்கு நமது ஆதரவை அளித்துவருகிறோம்!

என்றாலும், தமிழ்நாட்டில் காமராசரும் -- பக்தவத்சலமும் -- சுப்பிரமணியமும் -- மோகன் குமாரமங்கலமும் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சி செய்கிறார்கள்; தொழில் உறவைச் சீர்குலைக்க முற்படுகிறார்கள்; அமைதியாக இருந்த தொழிலாளர்களிடையே பிளவுகளை ஏற்படுத்திக் கலவரங்களை ஏற்படுத்தினார்கள்!

கழக அரசு, தொழிலாளர்களுக்கு விரோதமாக நடந்துகொண்டதாகக் காமராசரோ -- மற்றவர்களோ கூறமுடியுமா?

இதுவரையில், தமிழ்நாட்டில் ஏற்பட்ட தொழிலாளர் தகராறுகள் எல்லாம் தனிப்பட்டவர்களால் மூண்டதே தவிர, கழக அரசின் தவறான கொள்கையால் என்று கூறமுடியுமா?

எந்தப் போராட்டமானலும், அதில நியாயம் -- அநியாயம் பார்க்காமல், 'நான் ஆதரிக்கிறேன்' என்று முன்வருகிறார் காமராசர்!

'எப்படியாவது கழக அரசைக் கவிழ்க்க வேண்டும்' என்ற எண்ணத்தில் இத்தகைய செயல்களில் ஈடுபட முற்பட்டால், அத்தகையவர்கள் மக்கள் சக்தியில் சிக்குண்டு அழிந்து போவர்!

'இந்தியர்களுக்கு ஆளத் தெரியாது' என்று கூறிவந்த வெள்ளையர்கள் கதி என்னவாயிற்று -- நம்மிடம் ஆட்சியை ஒப்படைத்து விட்டு மூட்டை கட்டிக்கொண்டு போகத்தான் நேரிட்டது!

'கழகத்திற்கு ஆளத் தெரியாது— எங்களுக்குத்தான் தெரியும்' என வெள்ளையன் பாணியில் பேசி வரும் காமராசர் -- பக்தவத்சலம் -- சுப்பிரமணியம் போன்றவர்களின் கதி என்னவாகும் என்பதை நாம் சொல்லத் தேவையில்லை!

பற்பல சீரிய திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி வருவது கழக அரசு; தாழ்த்தப்பட்ட — பிற்பட்ட மக்களுக்காகப் பற்பல நன்மைகளைச் செய்து சாதனைகளைப் புரிந்துவருவது கழக அரசு!

எனவே, 'கழகத்திற்கு ஆளத் தெரியாது' என்ற மாய்மாலப் பேச்சு, 'வெறும் பித்தலாட்டப் பேச்சு' என்பதை மக்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள்! மக்களை ஏமாற்றிக் கழக அரசுக்கு மாசு கற்பிக்கலாம் என நினைப்பது வீண் கனவாகும்!"

#### க. இராசாராம்

"மத்திய அமைச்சர் சி. சுப்பிரமணியம் கிருஷ்ணகிரியில் பேசும்போது, 'தி. மு. க. அரசைக் குறைகூறுவது தவறானது அல்ல; சனநாயகத்தில் ஒரு கட்சி எப்படி நடக்க வேண்டுமோ அதன்படி நாங்கள் நடந்து வருகிறோம்' என்று பேசியிருக்கிறார்.

'தி. மு. கழக அரசைக் குறைகூறுவது தவறானது' அல்ல என்ற வாதத்தை அவர் எப்போது பேசுகிறார் என்பதைத் தான் பார்க்க வேண்டும்.

குடியரசுத் தலைவர் தேர்தலின் போது, காங்கிரசுக் கட்சியில் பிளவு ஏற்பட்டது; அப்போது இந்திராவுக்கு எதிராக மொரார்ஜி -- காமராசர் -- பட்டீல் போன்றவர்கள் கிளம்பினார்கள்,

அந்த நேரத்தில், தி. மு. கழகம் பெரிய பொறுப்பை ஏற்க வேண்டியிருந்தது; கலைஞரின் பெரிய இராசதந்திரத்தின் விளைவாக வி. வி. கிரி வெற்றி பெற்றார்!

அந்த நேரத்தில், தி. மு. கழக ஆட்சியைப் பற்றி சி. சுப்பிரமணியம் இப்படியெல்லாம் கூறினாரா? அப்படிக் கூறியிருந்தால், அவரை, 'பெரிய மனிதர்' என்று நாம் நினைக்கலாம்.

கிருஷ்ணகிரித் தேர்தலில் வெற்றி பெற்றபோது, 'இந்த வெற்றி எனது வெற்றியல்ல -- கலைஞர் வெற்றி' என்று கூறியவர், இன்று இப்படிப் பேசுகிறார்!

'தி. மு. கழக ஆட்சியில் ஊழல் -- ஊழல்' என்கிறார்கள்; அரசமானிய ஒழிப்பின்போது நாங்கள் நினைத்திருந்தால் என்னென்னவோ நடந்திருக்கும்? ஆனல் நாங்கள் தவறாக நடந்தோமா? அன்று இந்திராவுக்குக் கை கொடுத்தவர்கள் நாங்கள் -- ஆதரித்தவர்கள் நாங்கள்; இன்று எங்கள் ஆட்சியில் என்ன குறைகளை அவர்கள் கண்டார்கள்?

கழக அரசு, ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரம் உயரப் பாடுபடுகிறது; எனவே, இந்த ஆட்சியை யாராலும் அசைத்துவிடவும் முடியாது -- வீழ்த்திவிடவும் முடியாது!"

#### சத்தியவாணிமுத்து

"இந்த மாநாட்டின் மூலம் தி. மு. கழகம் புதிய சக்தியைப் பெற்றிருக்கிறது; இந்த சக்தியைப் பார்த்த பின்னரும், இந்த அரசைக் கவிழ்த்துவிடலாம் என்று யாராவது எண்ணினால் அவர்களை, 'அரசியல் ஞான சூனியங்கள்--பதவி வெறியர்கள்' என்றுதான் கூறவேண்டும்.

'தமிழ்நாட்டில் வெற்றி நடைபோடும் தி. மு. கழக அரசைக் கவிழ்த்துவிட்டால், இந்தியா முழுவதும் இந்திரா காங்கிரசு ஆளுகின்ற நிலைமை உருவாகிவிடும்' என்ற தவறான எண்ணம் நிலவிவருகிறது; 'தமிழ்நாட்டின் மீது இந்திராவின் பார்வை படவேண்டும்' என்ற நினைப்புடன் இந்திரா காங்கிரசில் சிலர் இருக்கிறார்கள்.

இந்திரா சிறந்த இராஜதந்திரியாக இருக்கலாம்; ஆனல் மற்ற மாநிலங்களில் ஆட்சியைக் கவிழ்த்த மாதிரி இங்கு தி. மு. கழக ஆட்சியைக் கவிழ்த்துவிட முடியுமா?

மற்ற மாநிலங்களில் சிலவற்றில், பல கட்சிகள் பங்கேற்ற ஆட்சி இருக்கிறது; சில மாநிலங்களில் ஆளுங் கட்சியிலேயே ஒற்றுமை இல்லை; ஆனல், தமிழகத்தின் நிலை வேறு; மக்களின் உள்ளத்தில் நீங்கா இடம் பெற்றுள்ள ஆட்சியைக் கவிழ்க்க முடியுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

தம்மைத் தலைமையமைச்சராக்கிய காமராசரின் பேச்சையே கேட்காமல் அவருக்கே புத்தி சொல்லி வருகிறார் இந்திரா காந்தி; அப்படிப்பட்டவர், சுப்பிரமணியம் -- மோகன் குமாரமங்கலம் போன்றோரின் பேச்சையா கேட்பார்?

மதுரையில் நடைபெறும் இம் மாநாடு, தி. மு. கழகத்தின் வலிமை இந்திரா காந்திக்கும் -- இந்திரா காங்கிரசுக்கும் எடுத்துக்காட்டக் கூடியதாகும்.

தி. மு. க. ஆட்சியைக் கவிழ்க்க நினைத்தவர்கள்கூட, இந்த மாநாட்டைப் பார்த்த பிறகும் கவிழ்க்க நினைத்தால் அது, அறிவு சூன்யத்தையே காட்டுவதாகும்."

#### மன்னை நாராயணசாமி

"20 ஆண்டுக் காலம் காங்கிரசு நாட்டை ஆண்டது; காமராசர் முதலமைச்சராக இருந்தார்; அவர் காலத்தில் என்னென்ன கொடுமைகளைச் செய்தார் என்பதை மக்கள் மறந்துவிடவில்லை.

மத்திய அமைச்சர்களான சி. சுப்பிரமணியம் -- மோகன் குமாரமங்கலம் ஆகியோரும், வலது கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த கல்யாணசுந்தரமும், தமிழ்நாட்டைக் காட்டிக் கொடுப்பவர்கள்; ஏழை எளிய மக்களுக்காக இந்த அரசு பாடுபட்டு வருகிறது; அதைப் பாழ்படுத்த முயற்சி செய்கிறார்கள்.

விவசாயிகள் பெயரால் நிலப்பிரபுக்கள் ஒன்றுகூடிப் போராட்டம் நடத்தினர்கள்; 12 அம்சக் கோரிக்கைகளை வற்புறுத்தினர்கள்; அந்தக் கோரிக்கைகள் முழுவதும் நிலப் பிரபுக்கள் சலுகை பெறுவதற்குத்தான்; ஒரு கோரிக்கைகூட விவசாயிகளின் நலனுக்காக அல்ல!

தி. மு. கழகக் கொள்கை சமதர்மக் கொள்கை; அந்தக் கொள்கையை நல்ல முறையில் நிறைவேற்றி வருகிறோம்.

கலைஞரின் தத்துவம்தான் தமிழகத்தில் வெல்லும்!

மாறுபட்ட கொள்கையுடையவர்கள் ஒன்று கூடியிருக்கிறார்கள்; அவர்கள் ஒன்று கூடியிருப்பது தி. மு. கழகத்தை அழிக்க அல்ல -- தங்களைத் தாங்களே அழித்துக் கொள்ளத்தான்!

#### எஸ்.ஜே. சாதிக் பாட்சா

"தி. மு கழகம் வலிவோடும் பொலிவோடும் வளர்ந்து வருகிறது; கோவையில் நடந்த கிளர்ச்சிக்குப்பின், தி. மு. கழகத்தின் செல்வாக்கு அங்கே குறைந்துவிட்டதா என்றால், இல்லை!

கோவையில் நடந்த கிளர்ச்சிக்குப்பின் நடைபெற்ற ஊராட்சித் தேர்தல்களில், கழக நண்பர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள்; அவர்கள், விவசாயச் சங்கத்தினரைத் தோற்கடித்திருக்கிறார்கள்.

எப்போதும்போல' கோவை நகரில் தி. மு. கழகம் நல்ல முறையில் வளருகிறது;

'மதுரை மாவட்ட மாநாடுபோல நடத்த முடியுமா?' என்று கேட்கிறார்கள்; கோவையிலும் இது போன்ற மாநாட்டை நடத்திக் காட்டுவோம்!

பல திட்டங்களைத் தீட்டி நாம் செயல்பட்டு வருகிறோம்; கிராமப்புறங்கள் முன்னேறப் பல திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம்; தொடர்ந்து திட்டங்களை நிறைவேற்ற தி. மு. கழக அரசுக்கு மக்கள் ஆதரவு தரடும்."

#### மு. கண்ணப்பன்

"கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் நாம் செய்துள்ள சாதனைகளை யாரும் மறைக்க முடியாது -- மறுக்கவும் முடியாது.

மக்களிடம், மாற்றார்கள் நம்மைப் பற்றித் தவறான முறையில் பிரச்சாரம் செய்யலாம்; ஆனல், கல்வித் துறையானலும்சரி -- சுகாதாரத் துறையானலும்சரி-- மின்சாரம், போக்கு வரத்துத் துறையானலும்சரி--நாம் சாதித்துள்ள சாதனைகள் -- செய்துள்ள நன்மைகள் அனைத்தும் சாமானியமானவையல்ல!

மாற்றாரின் தவறான பிரச்சாரங்களால் மக்கள் ஏமாந்துவிடமாட்டார்கள்!

தி. மு. கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபோதே, நம்மைப் பிடிக்காதவர்கள், 'இவர்கள் ஆட்சிக்கு வந்தால் கோவில்களையெல்லாம் பாழ்படுத்திவிடுவார்கள்' என்றும் பேசியதுண்டு.

ஆனல் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதுமே அண்ணா அவர்கள், இதுபற்றி மிகவும் தெளிவாக மக்களுக்கு எடுத்துச் சொன்னார்கள்—'ஒன்றே குலம்--ஒருவனே தேவன்' என்ற கருத்தை நாங்கள் ஒப்புக்கொண்டுள்ளவர்கள்; எங்களுக்கு மத நம்பிக்கை உள்ளவர்கள்கூட வாக்களித்து எங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்; எனவே, அவர்களின் மனம் புண்படாத அளவுக்கு நடந்துகொள்வோம்' என்று!

அந்த அடிப்படையில் -- நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வருவதற்கு முன்பு தமிழ்நாட்டுக் கோவில்களின் வருமானத்தையும் -- இப்போது நமக்கு வரும் வருமானத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தாலே எந்த அளவுக்குக் கோவில்களை நாம் பேணி வருகிறோம் என்பது புரியும்.

1966—67-ம் ஆண்டில் தமிழ்நாட்டுக் கோயில்களின் வருமானம் மூன்று கோடி ரூபாயாக இருந்தது; தற்போது ஏறத்தாழ ஒன்றரை மடங்கு பெருகி, ஏழு கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது.

மதுரை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், சென்ற ஆண்டில் பழனியின் வருமானம் ரூ. 39 இலட்சமாக வளர்ந்திருக்கிறது; அது இந்த ஆண்டில் மேலும் வளர்ந்து ரூ. 52 இலட்சமாக உயர்ந்திருக்கிறது.

கோவில்களின் வருமானத்தைக் கொண்டு இறை பணிகள் செய்வது மட்டுமல்ல -- அறப்பணிகளும் செய்துவருகிறோம்.

பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி அளித்து ஏழைகட்கு வாழ்வு தரவும், கண்ணொளி இல்லாத ஏழை எளியவர்கட்குக் கண்ணொளிச் சிகிச்சை அளிக்கவும் கோவில் வருமானங்களை அறப்பணிகட்குப் பயன்பட உதவி புரிகிறோம்.

இப்படிப்பட்ட அமைதியான ஆட்சியைக் காக்கும் பொறுப்பு, மக்களின் கையில்தான் இருக்கிறது!"

#### சி. பா. ஆதித்தனர்

"இன்றையத்தினம் தமிழக அரசியலில் நாம் ஒரு புலியாக இருக்கிறோம்; நம்மை எதிர்த்து மூன்று வேட்டை நாய்கள் நின்று கொண்டிருக்கின்றன!

ஒன்று -- வலது கம்யூனிஸ்டு; அது வன்முறையில் நம்பிக்கை உள்ளது; 'பிரச்சினைகள் தீர வேண்டுமானல் பிணம் விழ வேண்டும்' என்பது அவர்களுடைய கொள்கை!

இரண்டாவது -- இந்திரா காங்கிரசுக் கட்சி; அவர்கள், 'தி. மு. கழகத்தின் வெற்றிக்கெல்லாம் நாங்களே காரணம்' என்று கூறிக் கொண்டிருக்கிறார்கள்; அவர்களுடைய செல்வாக்கு பொதுமக்களுக்கு நன்றாகத் தெரியும்.

மூன்றாவது -- காமராசரின் காங்கிரசுக் கட்சி; இன்றையத் தினம் காமராசர் மிக மோசமான நிலையில் இருக்கிறார்; 'எங்காவது ஏதாவது போராட்டம் நடக்குமா -- அங்கே போய்த் தலைமைதாங்கலாமே' என்கின்ற அளவுக்கு அவர் நிலை சென்று விட்டது!

இந்தக் கட்சிகளெல்லாம் சேர்ந்துதான், முன்னேற்றக் கழகத்தை ஒழிக்க வேண்டும்' என்று முயற்சி செய்துவருகின்றன; ஆனல், திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு ஈடான ஒன்று இந்தியாவின் எந்த ஒரு மாநிலத்திலும் இல்லை.

மூன்று நாட்களாக நடக்கும் இந்த மாநாட்டில் திரண்டிருக்கின்ற மக்கள் கூட்டத்தைப்போல், இது வரையில் என் வாழ்நாளில் கண்டதில்லை!"

# சென்னை 61-வது வட்ட அண்ணா படிப்பகம்

சென்னை அறிஞர் அண்ணா நகர் (61-வது வட்டம்) கீழ்ப்பாக்கம் தோட்டக் காலனி அறிஞர் அண்ணா படிப்பகத்தின் முதலாண்டு நிர்வாகத் தேர்தல் வட்டச் செயலாளர் என். கிருட்டினன் அவர்களை ஆணையாளராக கொண்டு நடந்தது; தலைவராக இரா. இராமலிங்கமும், செயலாளராக க. ஏ அர்ச்சுனனும், துணைச் செயலாளராக த. போஜன் ராஜனும், பொருளாளராக பி. சு. கணேசனும் செயற்குழு உறுப்பினர்களாக ஐந்துபேர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## நன்றியறிவிப்பு

"14—7—72 அன்று தமிழகக் கல்வி -- உள்ளாட்சித் துறை அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் மாயூரம் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு என். கிட்டப்பா அவர்களின் சகோதரியின் மகள் திலகவதிக்கும் -- எனக்கும் நடைபெற்ற திருமணத்திற்கு வருகை தந்து வாழ்த்துரை வழங்கிய பெரியோர்களுக்கும், வருகை தந்த அனைவர்களுக்கும், வாழ்த்துச் செய்திகள் -- பரிசுகள் வழங்கிய பெரியோர்களுக்கும் இதயம் கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்" என, மாயூரம் அ. செங்குட்டுவன் அறிவிக்கிறார்.

# மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கையால் விளைந்துள்ள விபரீதம்

## தலைமையமைச்சர் இந்திரா காந்தி முன்னிலையில் எதிர்க் கட்சித் தலைவர்கள் குற்றச்சாட்டு

### கழக உறுப்பினர் தில்லை வில்லாளன் வலியுறுத்தல்

புதுடில்லி, ஆக. 9--

"நாடெங்கிலும் விலைவாசிகள் கடுமையாக உயர்ந்து வருவதற்கு அரசின் நடவடிக்கைகளே காரணமாகும்" என்று எல்லா எதிர்க் கட்சித் தலைவர்களும் நேற்று குற்றஞ்சாட்டினர்; 'இந்தியப் பொருளாதாரக் கொள்கையே, பயன்படுத்துவோரைப் புறக்கணிக்கும் கொளகையாக இருந்துவருகிறது' என்று கூறினர்.

நாடாளுமன்ற மேலவை தி.மு.க. குழுத் தலைவர் தில்லை வில்லாளன், 'விலை உயர்வைத் தடுக்க மத்திய அரசு பல துறைகளிலும் நடவடிக்கை எடுககவேண்டும்; இதில் கால தாமதம் கூடாது; நியாய விலைக் கடைகளை அதிகப்படுத்தி -- மக்களுக்கு உணவுப் பொருட்கள் கிடைக்கச் செய்யவேண்டும்' என்று வலியுறுத்தினர்.

விலைவாசி நிலைமை குறித்து விவாதிப்பதற்காக, எதிர்க் கட்சித் தலைவர்களை நேற்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி சந்தித்தார்.

தி. மு. கழகம் -- வலது கம்யூனிஸ்டு -- இடது கம்யூனிஸ்டு -- சுதந்தரா -- ஜன சங்கம -- சிண்டிகேட் ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் இககூட்டத்தில் கலந்துகொண்டனர்.

திட்டவட்டமான யோசனை எதுவும் இக்கூட்டத்தில் உருவாகவில்லையென்ருலும், 'அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையே விலைவாசி உயர்வுக்கு முக்கியக் காரணம்' என்பதை, எதிர்க் கட்சியினர் தலைமையமைச்சரிடம் விளக்கிக் கூறினர்.

நிலைமையைச் சமாளிக்க நியாய விலைக் கடைகளை அதிகரிக்க வேண்டுமென்றும், அதிலும் குறிப்பாகக கிராமப்புறங்களில் அதிகக் கடைகள் திறக்க வேண்டுமெனறும் அவர்கள் தெரிவித்தனர்.

நியாய விலைக் கடைகள் குறித்து உணவு அமைச்சர் தெரிவித்த எண்ணிக்கையில் சிலர் சந்தேகம் தெரிவித்தனர்.

விலைவாசியைச் சீராக வைத்திருப்பதற்காகப் பெருமளவு தானியச் சேமிப்பைக் கைவசம் வைக்கத் தவறியதற்காக இந்திய உணவுக் கார்ப்பரேஷனை எதிர்க கட்சித் தலைவர்கள் கடுமையாகக் கண்டித்தனர்.

# மதுவிலக்கு-மாராட்டிர அரசு புதிய அறிவிப்பு

பம்பாய், ஆக. 9—

மகாராஷ்டிர மாநிலததில 21 வயதுக்கு மேற்பட்ட யாரும இனி மது அருந்துவதற்கும் பெர்மிட் வாங்கிக் கொள்ளலாம்; இதற்கு நிபந்தனை எதுவும் இல்லை; உடனடியாகவும இது செயலுக்கும் வரும்.

"இதுவரையில், சுகாதார காரணங்களுக்காகப் 'பெர்மிட்' வழங்கபபட்டது; அது இப்போது மேறகண்டவாறு தளர்ததப்படுகறது"

என்று மாராட்டிர சட்டமன்றத்தில், மதுவிலக்கு அமைச்சர் டாக்டர் போசல் தெரிவிததார்.

"21 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மிகக் குறைந்த விலையில் நாட்டுச சாராயம கிடைக்கவும் வகை செய்யப்படும்" எனறும் அவர் சொன்ஞர்.

மாராட்டிரத்தில் மதுவிலக்கு 22 ஆண்டுகளாக செயலில இருந்துவந்தது: இந்த அறிவிபபின மூலம கிட்டத்தட்ட அந்த மாநிலததில் மதுவிலக்கு எடுபட்ட மாதிரிதான்.

இனி மொத்த மதுவிலக்கைக் காட்டிலும், மக்கள மிதமாக மது அருந்தாதவாறு அரசு கவனம் செலுததும்.

அளவுக்கு மீறி மது அருந்திவிட்டுப் பொது இடங்களில் ஒழுங்கீனமாக நடநதுகொள்பவர்களுக்குக் கடுமையான தண்டனைகள் வழங்க அரசு எண்ணியிருக்கிறது.

கள் அல்லது பீர் அருந்துவதற்கு இப்போது பெர்மிட் எதுவும தேவையில்லை.

# இரயில் விபத்து--போர்டு தலைவர் பதவி விலகல்

புதுடில்லி, ஆக. 9-

கடந்த ஞாயிறன்று இராவல் பிண்டிக்கு அருகில் ஏற்பட்ட இரயில் விபத்தையொட்டி, பாகிஸ்தான் இரயில்வே போர்டு தலைவர் பதவி விலகிவிட்டார்.

இந்த விபத்தில் 64 பேர் கொல்லப்பட்டனர்.

அவரது பதவி விலகலை பூட்டோ ஏற்றுக்கொண்டிருக்கிருா.

"போக்குவரத்துத்துறை அமைச்சர் குலாம் முஸ்தாபாவும் பதவி விலக முன்வந்தார்; ஆனால் அது ஏற்றுககொள்ளப்படவில்லை; ஏனெனில் அமைச்சர் விபத்துக்கு நேரடியான பொறுப்பாளி அல்லர்"

என்றும் பூட்டோ தெரிவித்தார்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் சுற்றுப் பயணம் செய்தாலும், மககளிடம் கழகததிறகு இருககினற செலவாககைக குறைத்துவிட முடியாது.

காமராசரே அன்று -- நாங்கள் தெருவிலே நின்றபோது நீஙகள் கோட்டையிலே இருந்துகொண்டு எங்களைத் திட்டினீர்கள் 'அதன பயன -- நீங்கள் தெருவுக்கு வந்துவிட்டீர்கள்! மககள் எஙகளை கோட்டைக்கு அனுப்பிவைததார்கள்; ஆனுல நீங்கள் தெருவுககு வந்ததும் எஙகளைத திட்டிககொண்டிருக்கிறீர்கள; இனனும் எங்களை எங்கே கொண்டுபோய் வைகக நீங்கள் திட்டுகிறீர்கள்--இதற்கு மேல் எந்தக கீழ் நிலைககுப் போகத் திட்டுகிறீரகள்?

நன்ருகத் திட்டுங்கள்! நீங்கள் பேசப் பேச, எங்கள் தோழர்கள் உணர்ச்சி வசப்பட்டுக கழக ஆக்க வேலைகளில் தீவிரமாக ஈடுபடுகிருர்கள்! அவாகளை உற்சாகப்படுத்த நன்ருகத் திட்டுங்கள்!"

## நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

10--8--72

பேட்டையவாய்த்தலை

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு அழகிரி திடலில்; தலைவர்: எம். பிச்சை; பேசுவோர்: கேரளசுந்தரம் எம்.சி., குளித்தலை முத்துகிருஷ்ணன் எம்.எல்.சி., மு. கடராசன், ஏ. வி. கிருட்டிணமூர்த்தி எம்.சி., எஸ். ஜி. கிருஷ்ணன், டி. என். வையாளி, மற்றும் பலர்.

# ஆப்பிரிக்கக் கைதிகள்

## 'அடிமை முறை'யில் வேலைவாங்கப்படுகின்றனர்

### மனித உரிமை விசாரணைக் குழுவின்முன் சாட்சியம்

நைரோபி, ஆக. 9—

"தென்னுப்பிரிக்கச் சிறையிலுள்ள ஆப்பிரிக்கக் கைதிகள் வெள்ளைக்கார விவசாயிகளால் வாடகைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, 'அடிமைத் தொழிலாளர்களாக வேலைவாங்கப்படுகின்றனர்"

என்று ஐ. நா. மனித உரிமை விசாரணைக் குழுவின் முன்னிலையில் தென்னுப்பிரிக்கச் சிறைக் கைதி ஒருவர் சாட்சியம் அளித்திருக்கிருர்.

தென்னுப்பிரிக்கா, ரொடீஷியா, ஜாம்பியா ஆகிய நாடுகளில சிறை வைக்கப்பட்டவர்கள் கொடுமைப் படுத்தப்படுவதாகக கூறப்படுவதை, இக்குழு விசாரிககிறது.

நாளொன்றுக்கு ரூ 2 விதம் கைதிகள் வாடகைககு விடப்படுகின்றனராம்.

ஒழுங்காக வேலை செய்யாத கைதிகளை அடித்து வேலைவாங்குவதற்குக்கூட வெள்ளைக்கார விவசாயிகளுக்கு உரிமை தரப்பட்டிருக்கிறதாம்.

# பாகிஸ்தான் வசமுள்ள இந்தியக் குடிமக்கள்

## விரைவில் விடுவிக்கப்படுவர்

புதுடில்லி, ஆக. 8—

"இந்தியா--பாகிஸ்தான போரின போது பாகிஸ்தானில் காவலில் வைக்கப்பட்ட 6,770 இந்திய சிவிலியனகள் விரைவில் திருபபி அனுப்பப்படுவாாகள்"

என்று இஸ்லாமாபாத்தில் வெளியிடபபட்ட அரசு அறிககை ஒனறு கூறியது.

"அவர்கள் விடுவிக்கப்படும் தேதி--இடம் விரைவில அறிவிக்கப்படும" என்று பாகிஸ்தான் வானெலி கூறியது.

# நிலக்கரி நிறுவனம் காட்டும் நட்டக் கணக்கு

புதுடில்லி, ஆக. 8—

நெய்வேலி, நிலககரி கார்ப்பரேஷனுககு 1969—70-ல் ரூ. 204.73 இலட்சமும், 1970—71-ல ரூ. 1,073.24 இலட்சமும, 1971—72-ல் ரூ. 1,238 இலடசமும நட்டம் ஏறபட்டது.

நாடாளுமன்ற மேலவையில், கேள்வி ஒனறுககுப் பதிலளிககையில், சுரங்கத துறைத துணை அமைச்சர் ஷா நவாஸ் கான இத தகவலைக் கூறினர்.

"இதற்கான காரணங்களைக் கண்டுபிடித்து நிவாரணங்களைக கூறப் பேராசிரியா கே. வி. சுப்பிரமணியம் தலைமையில ஒரு குழு அமைககப்பட்டது; அந்தக் குழுவின் பரிந்துரைகளின அடிப்படையில் தற்போது அரசு தகுந்த நடவடிக்கைகள் எடுத்துவருகிறது" என்றும் அவர் சொன்னர்.

# கடமை தவறும் பள்ளிகள்மீது கடும் நடவடிக்கை--கேரள அரசு எச்சரிக்கை

திருவனந்தபுரம், ஆக. 9—

கேரளத்தில் கல்வித் துறைப் பிரச்சினை மேலும் தீவிரமாகிக் கொண்டு வருகிறது.

தனியார் கல்லூரிகள்மீது அரசு சில கட்டுப்பாடுகளைக் கொண்டு வருவதை எதிர்த்து ஏராளமான கல்லூரிகள் இனனமும் திறக்கப்படாமலேயே இருந்து வருகின்றன; அவைகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் பல பள்ளிகளும் நேற்று மூடப்பட்டிருக்கின்றன.

கேரளத்தில் மொத்தம் 10,830 பள்ளிகள் உள்ளன; இவைகளில் 6,754 பள்ளிகள் தனியாரால் நடத்தப்படுகின்றன. கிறித்துவ மிஷினரிகள் -- நாயர் சொசைட்டி சர்வீசு ஆகியவைகளே இவைகளில் பெரும்பாலானவற்றை நடத்திவருகின்றன.

தனியார் கல்லூரிகள் மீதான அரசாங்கக் கட்டுப்பாட்டை இந் நிறுவனங்கள் கடுமையாக எதிர்த்து வருகின்றன. இவைகளுடன் சேர்ந்துகொண்டு, 'கேரளக் காங்கிரசு' என்னும் அரசியல் கட்சியும் அரசை எதிர்த்து வருகிறது.

கேரளக் காங்கிரசின் மாணவர் பிரிவு, அக்கட்சி பலம் பெற்றிருக்கும் சில மாவட்டங்களில் பள்ளிகளை இயங்கவிடாமல் செய்திருக்கிறது; இப்படிச் செய்யும்படி, இந்த மாணவர் பிரிவுக்குப் பள்ளி நிர்வாகிகளே ஊக்கம் கொடுத்து வருவதாள அரசு குற்றஞ்சாட்டியது.

பள்ளி நிர்வாகிகளின் இச்செயலை கடுமையானதாகக் கருதி அரசு எச்சரித்திருக்கிறது; 'கேரளக் கல்வித் துறையையே நிலைகுலையச் செய்து, அரசை அடிபணியச் செய்யலாம் என்ற நோக்கமே இச்செயல்களின் பின்னணியாகும்' என்று அரசு கருதுகிறது.

அரசு இதற்கு இணங்காது என்றும் கடமை தவறும் பள்ளிகள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கை விடப்பட்டிருக்கிறது.

# மத்திய அரசின் அலட்சியம்

## மக்களவையில் கழக உறுப்பினர் குற்றச்சாட்டு

புதுடில்லி, ஆக. 9--

"1970-71-ல் மட்டும், வெள்ளத்தால இந்தியாவில் ஏற்பட்ட இழப்பு ரூ 620 கோடியாகும்; அதே நேரத்தில் வெள்ளத்தைச் சமாளிக்கக கடந்த 20 ஆண்டுகளில் அரசு செலவிட்ட தொகை ரூ. 276 கோடி மட்டும்தான!

"வெள்ளப் பிரச்சினையைச் சமாளிபபதில் அரசு எவ்வளவு அலட்சியமாக இருந்திருக்கிறது என்பதை இந்தப் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன"

என்று மக்களவையில், தி. மு. கழக உறுப்பினர் மாதா கவுடா சுட்டிக்காட்டினர்.

"வறட்சியையும், வெள்ளத்தையும் சமாளிப்பதறகு ஓர் இணைப்பான திட்டத்தை அனைத்திந்திய ரீதியில் வகுககவேணடும" என்று உறுபபினாகள் பலர் வற்புறுததினர்.

"வெள்ளத்தையும் -- வறட்சியையுமபற்றி அரசாங்கம தகுந்த முறையில கவனிககவில்லை; இபபொழுதாவது நிரந்தரமான தீர்வு காணுவதுபற்றி அரசு ஆலோசிகக வேணடும" எனறு அவர்கள் கேட்டுக்கொண்டனா.

# மாணவர் கல்லூரி

## இந்தியாவிலேயே முதன் முதலாக நடத்தப்படுகிறது

திருவனந்தபுரம், ஆக. 9 —

இந்தியாவில் முதன் முதலாக மாணவர்களாலேயே நடத்தப்படும் கல்லூரி ஒன்று இங்கு துவக்கிவைக்கப்படுகிறது.

கேரளப் போலீசுத்துறை அமைச்சர் கருணகரன் இதைத் துவக்கிவைக்கிருர்.

பெரும்பாலான கல்லூரிகள் இன்னமும் திறக்கப்படாமல் இருப்பதற்கு மாற்று ஏற்பாடாக இக் கல்லூரி துவக்கப்படுகிறது.

# மின்விசைப் பற்ருக்குறை

## மத்திய அமைச்சர் 'அபாய அறிவிப்பு'

புதுடில்லி, ஆக. 9-

"1973-74-ல் இந்தியாவில் 20 அல்லது 30 இலட்சம் கிலோவாட் மினவிசை பற்ருக்குறை ஏற்படக்கூடிய நிலைமைக்கு மக்கள் தயாராக இருக்கவேண்டும்"

என்று மத்திய அமைச்சர் டாக்டர் கே. எல். ராவ், மக்களவையில் ஓர் கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினர்.

"இடுக்கி (கேரளம்), கல்பாக்கம் (தமிழ்நாடு) திட்டங்கள் முடிவடைந்த பிறகு இந்தப் பற்ருக்குறையை ஓரளவுக்குச் சமாளிக்கலாம்" எனருர்.

"இது மிகவும் முக்கியமான பிரச்சினை" எனக் கருதி அவைத் தலைவர், இதைப் பற்றி 25 நிமிட நேரம் கேள்விகள் கேட்க அனுமதித்தார்.

# குறுகிய காலப் பயிருக்கு சாத்தனூர் தண்ணீர்

வேலூர், ஆக. 8—

சாத்தனூர் அணையிலிருந்து சூலை 27-ம் நாள் முதல் திருக்கோயிலூர் வட்டம் (தென்னுற்காடு மாவட்டம்), வடாற்காடு மாவட்டத்தில் உள்ள செங்கம் -- திருவண்ணமலை வட்டங்களில் 8,140 ஏக்கரில் குறுகிய கால நெல் சாகுபடி செய்வதற்காக 100 நாட்களுக்குத் தண்ணீர் விடப்படும்.

இத்தகவலை, மாவட்டக் கலெக்டர் வி. ஆறுமுகம் தெரிவித்தார்; 'விவசாயிகள் அதிக விளைச்சல் தரும் குறுகிய கால நெல்லைச் சாகுபடி செய்வர்' என்ருர்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தப் பட்டியலிலிருந்து இந்த உண்மை தெரிகிறது.

1961—62-ல் இருந்த விலைவாசிகளை 100 என வைத்துக்கொண்டு இப் புள்ளிவிவரங்களின் உயர்வு கணககிடப்படுகிறது; அதன்படி 1970 சூலையிலிருந்து 1972 சூலைக்கு உட்பட்ட இடைக்காலத்தில, பஜ்ரா சோளம 47.20 புள்ளிகளும், மக்காச் சோளம் 40.20 புள்ளிகளும், சாதாரணச் சோளம் 16.20 புள்ளிகளும் உயர்ந்துள்ளன.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible]